# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:60** **தேதி:-25.08.2015**

## ஜூலை மாதத்தில் BSNLதான் அதிக இணைப்புகளை கொடுத்துள்ளது

அன்பார்ந்த தோழர்களே,

ஜூலை மாதத்தில் BSNL நிறுவனம் தான் அதிக மொபைல் இணைப்புகளை கொடுத்துள்ளது என்பது ஒரு இனிப்பான செய்தி. ஜூலை மாதத்தில்

| | | |
|---|---|---|
| BSNL | : | 16 **லட்சம் இணைப்புகள்** |
| Airtel | : | 11.90 **லட்சம் இணைப்புகள்** |
| IDEA | : | 10.25 **லட்சம் இணைப்புகள்** |

BSNL நிறுவனம் மே மாதத்தில் 8.6 லட்சம் இணைப்புகளை மட்டுமே கொடுத்திருந்தது. அது ஜூன் மாதத்தில் 11 லட்சமாக உயர்ந்தது. தற்போது அது 16 லட்சமாக உயர்ந்துள்ளது. 7ஆம் கட்ட மொபைல் விரிவாக்கத்தின் காரணமாக BSNLன் சேவைத்தரம் பொதுவாக உயர்ந்துள்ளது. அத்துடன் சமீபத்தில் BSNL நிறுவனம் அறிவித்துள்ள இலவச ரோமிங் திட்டம் காரணமாக அதன் தனியார் போட்டியாளர்களின் போட்டியினை சமாளித்து வலுவான் நிலைக்கு வந்துள்ளது. அதே போல MNP திட்டத்திலும் தனியார் நிறுவனங்களுக்கு சென்ற BSNL வாடிக்கையாளரை விட அவர்களிடமிருந்து BSNLக்கு வந்த வாடிக்கையாளர்களே அதிகம். இது ஒரு சாதகமான அம்சம். ஊழியர்களாகிய நாம் அதிக பட்ச உழைப்பை செலுத்தி இந்த போக்கினை தக்க வைத்துக் கொள்வது மிக மிக அவசியம்.

தற்போது மாவட்ட மாநில மட்டங்களில் உள்ள FORUM ஊழியர்களை ஊக்குவிக்கும் ஒரு முக்கிய பாத்திரத்தை வகிக்க வேண்டும். BSNLன் FRANCHISEE MANAGERகளும், RETAIL MANAGERகளும் அடிக்கடி FRANCHISEE அலுவலகங்களையும் சில்லறை விற்பனைதாரர்களையும் நேரடியாக சென்று சந்தித்து போதுமான BSNL பொருட்கள் அங்கு உள்ளனவா என்பதை உறுதி செய்யும் வகையில் அவர்களை ஊக்குவிக்க வேண்டும். அகில இந்திய FORUMத்தின் அறைகூவலான 'இலவச ரோமிங்' மற்றும் 'இரவு நேர இலவச அழைப்புகள்' ஆகிய திட்டங்களை விளம்பரப்படுத்தி நமது விற்பனையை அதிகப்படுத்தும் நோக்கத்தோடு அதிக அளவிலான மேளாக்களையும் 'ROAD SHOW'க்களையும் நடத்த வேண்டும். தரைவழி தொலைபேசி இணைப்புகளை பொறுத்த வரை எந்த ஒரு புதிய இணைப்பு வேண்டிய விண்ணப்பமும் FEASIBILITY இல்லை என்று நிராகரிக்கப்படக் கூடாது. புதியதாக உருவாகி வரும் காலணிகள் மற்றும் நகர்களுக்கு கேபிள் பதிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அதே போல கூடிய விரைவில் கேபிள் பழுதுகள் சரி செய்யப்பட வேண்டும். தல மட்டங்களுக்கு தேவையான அனைத்து பொருட்களையும் உபகரணங்களையும் தருவதாக CMD மற்றும் DIRECTOR(CFA) ஆகியோர் FORUM தலைவர்களுக்கு உறுதி அளித்துள்ளனர். எனவே தலமட்டங்களில் பொருட்கள் பற்றாக்குறைகளை மாநில அகில இந்திய FORUMகளுக்கு தெரியப்படுத்தவும்.

**சேவைகளை விரிவாக்குவோம். வலுவான BSNLஐ உருவாக்குவோம்.**

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**